# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்தின் 3000 ஆவது நாள் நிறைவில் வவுனியாவில் மரணமான தாய்

வவுனியா, பெப். 24

வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சுழற்சி முறைப் போராட்டத்தின் 3000 ஆவது நாளான இன்று, தனது மகனைத் தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வந்த வேலுசாமி மாரி (மாரி அம்மா) என்பவரே தனது 79 ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

இவரின் மகனான வேலுச்சாமி சிவகுமார் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்நிலையில், ‘மாரி அம்மா’ என அழைக்கப்படும் வேலுசாமி மாரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னின்று போராடியிருந்தார்.

வவுனியா ஏ - 9 வீதியில் சுழற்சி முறையில் இடம்பெற்று வரும் போராட்டத்திலும் இவர் தொடர்ச்சியாகப் பங்குபற்றியிருந்தார்.

2 ►



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 12 திங்கட்கிழமை 24.02.2025 கதிர் 135




# வீடுகளைக் கொளுத்தி ஆட்சியை கைப்பற்றும் எண்ணம் இல்லை

## இப்படிச் சொல்கின்றார் நாமல் எம்.பி.



கொழும்பு, பெப். 24

“வீடுகளைக் கொளுத்தி அரகலய மூலம் ஆட்சியைப் பிடிக்கும் எண்ணம் எம்மிடம் இல்லை. ஜனநாயக வழியிலேயே எமது அரசியல் பயணம் தொடரும்.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“எம்மிடம் ஆயுதப் படை இல்லை. வீடுகளைக் கொளுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொன்று அரகலய மூலம் ஆட்சியைப் பிடிக்க மாட்டோம். ஜனநாயக வழியில் எமது பயணம் தொடரும்.

ஆளுங்கட்சியிலுள்ள 159 நாடாளுமன்ற உறுப்பினர்களால் பலனில்லை என ஜனாதிபதி கருதினால் இரண்டரை வருடங்களுக்குப் பிறகு , நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்ல முடியும்.

எம்மிடம் வேலைத்திட்டம் உள்ளது, தூரநோக்கு சிந்தனை உள்ளது. கடந்த காலங்களில் செயற்பட்ட அனுபவம் உள்ளது. எனவே, ஜனநாயக வழியில் எந்நேரத்திலும் ஆட்சியைப் பொறுப்பேற்கத் தயார்.

எந்தக் கட்சியாக இருந்தாலும் இளைஞர்களைப் பொறுப்புடன் வழிநடத்த வேண்

2 ►

# நாட்டின் தேசிய பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துங்கள்

## அரசிடம் சஜித் கோரிக்கை



கொழும்பு, பெப். 24


“கடந்த 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையிலான 4 நாட்களில் 8 கொலைகள் நடந்துள்ளன. தேசிய பாதுகாப்புக்கு இது பெரும் பிரச்சினையாக அமைந்திருந்தாலும், அது ஒரு பிரச்சினையல்ல என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையே இடம்பெற்று வரும் இந்தக் கொலைக் கலாசாரம் தேசிய பாதுகாப்புக்குப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே, தேசிய பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துங்கள்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

2 ►

## கனேமுல்ல சஞ்சீவ படுகொலை:

# துப்பாக்கிதாரிக்கு உதவிய பெண் மத்துகம பகுதியில் தலைமறைவு

## பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை





கொழும்பு, பெப். 24

பாதாள உலகக் கும்பலின் தலைவரான கனேமுல்ல சஞ்சீவ என்பவரைப் படுகொலை செய்ய துப்பாக்கிதாரிக்கு உதவி செய்தார் எனக் கூறப்படும் இஷாரா செவ்வந்தி என்ற பெண்ணைக் கைது செய்வதற்குப் பொலிஸார் சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

2 ►

# கைதான 32 இந்திய மீனவர்களுக்கும் மார்ச் 7ஆம் திகதி வரை விளக்கமறியல்

மன்னார், பெப். 24

தலைமன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.



## காணாமல் .....

தனது மரணத்துக்கு முன்பதாக தனது மகனை நேரில் பார்த்து விடுவேன் என ஏங்கிய ஒரு தாயின் ஏக்கம் இன்றுடன் நிறைவேறாமல் முற்றுப் பெற்றுள்ளது.

## நாட்டின் தேசிய.......

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அண்மைய தினத்தில் நீதிமன்றத்தினுள் நடந்த மிலேச்சத்தனமான கொலையுடன் தொடர்புடைய பெண்ணின் வண்ணப் புகைப்படங்கள் உள்ளிட்ட தகவல்கள் புலனாய்வுத்தரப்புக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பிலான புலனாய்வு அறிக்கைகளை ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டன.

குறித்த கொலை தொடர்பிலான தகவல்கள் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்றிருந்தன. இவ்வாறு தகவல்கள் கிடைக்கப் பெற்றிருந்தும் பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்பட்டமை குறித்து தெளிவான விளக்கம் இங்கு வழங்கப்பட வேண்டும்.

கொலையாளிகளின் இந்தச் செயல்கள் பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றன. புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைக்கப் பெற்ற பிறகு அது குறித்து நடவடிக்கைகளை எடுக்க இதைவிடவும் முறையான திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும்.” - என்றார்.

## துப்பாக்கிதாரிக்கு ......

இந்நிலையில், சந்தேகநபரான பெண் களுத்துறை, மத்துகம பகுதியில் தலைமறைவாகியிருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி, களுத்துறை,மத்துகம மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் பொலிஸார், விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸார் குறித்த பகுதிகளில் வீதித் தடைகளை அமைத்து ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீடுகளைக் கொளுத்தி.......

புதிய இலங்கையைக் கட்டியெழுப்பும் வகையில் நாம் இளைஞர்களை வழிநடத்துவோம்.” - என்றார்.

# சங்கு சின்னத்தில் இணையும் 9 தமிழ் கட்சிகள்!

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 9 தமிழ் கட்சிகள் இணைந்து போட்டியிடுவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் 9 தமிழ் கட்சி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இதன்போதே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயக தமிழரசு கட்சி, சமத்துவ கட்சி ஆகிய 9 கட்சிகளும் இணைந்து கொண்டுள்ளனர்.

கலந்துரையாடலில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்,

தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா,

ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. ரவீந்திரா (வேந்தன்)

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன்,

தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ்,

ஜனநாயக தமிழரசு கட்சி சார்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.நாவலன்,

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் மற்றும் சமத்துவ கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட இன்னும் சிலர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 9 கட்சிகளும் இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் போட்டியிட இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மணல் ஏற்றிச்சென்ற லொறி விபத்து- தெய்வாதீனமாக உயிர் தப்பிய சாரதி!



மஹியாங்கனையிலிருந்து தலவாக்கலை பகுதிக்கு மணல் ஏற்றிச்சென்ற லொறி விபத்துக்குள்ளானதில் நுவரெலியா - தலவாக்கலை ஏ - 7 பிரதான வீதி வழியான போக்குவரத்து ஒரு மணித்தியாலம் பாதிக்கப்பட்டுள்ளது.

லொறியில் திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக சாரதி வாகனத்தை கட்டுப்படுத்த முடியாது போனமையால் விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்து இன்று அதிகாலை 4.00 மணியளவில் நானுஓயா டெஸ்போட் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தினால் நுவரெலியா - தலவாக்கலை ஏ - 7 பிரதான வீதி வழியான போக்குவரத்து ஒரு மணித்தியாலம் பாதிக்கப்பட்டிருந்த போதும் பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் உடனடியாக வீதியில் கொட்டிய மணலை அகற்றி வீதியின் போக்குவரத்து வழமைக்கு கொண்டுவரப்பட்டது.

லொறியில் சாரதி மட்டும் பயணித்திருந்த நிலையில் அவர் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து சம்பவம்தொடர்பில் மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# வவுனியாவில் மோ. சைக்கிளுடன் கார் மோதி தீப்பற்றி எரிந்து நாசம்

## இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்



வவுனியா, பெப். 24

வவுனியா, பூந்தோட்டம் வீதியில் சென்று கொண்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகிய நிலையில் தீப்பற்றி முழுமையாக எரிந்த சம்பவம் ஒன்று இன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகர் பகுதியில் இருந்து பூந்தோட்டம் நோக்கிச் சென்ற காரும் பூந்தோட்டம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய நிலையில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதனையடுத்து இரண்டு வாகனங்களும் தீப்பற்றி எரிந்த நிலையில் அங்கு குழுமிய மக்களால் தீயைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அது சாத்தியப்படவில்லை.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டதோடு காரில் வந்தவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

வவுனியா நகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன முழுமையாக எரிந்துள்ளன.

விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம்– சந்தேகநபர்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க அனுமதி!

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள துப்பாக்கிதாரி மற்றும் அவர் தப்பி செல்ல உதவிய சாரதி ஆகியோரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி இன்று இந்த உத்தரவை வழங்கினார்.

அத்துடன், புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு சட்டத்தரணியாக வந்த பெண் சந்தேகநபர் தப்பிச் செல்ல உதவியதாகக் கூறப்படும் மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு குற்றவியல் பிரிவில் பொறுப்பிலிருந்த சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலியால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்புப் படைகளில் இருந்து தப்பிச் சென்றவர்களை கைது செய்ய உத்தரவு– சம்பத் துய்யகொந்தா!



பாதுகாப்புப் படைகளில் இருந்து தப்பிச் சென்றுள்ள அனைவரையும் உடனடியாக கைது செய்யுமாறு பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற விமானப்படையின் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா உத்தரவிட்டுள்ளார்.

ஆயுதப் பயிற்சி பெற்ற பின்னர் சட்டவிரோதமாக இராணுவத்தை விட்டு வெளியேறும் பலர் பாதாள உலக குழுக்களுடன் தொடர்பு கொள்ளும் போக்கு அதிகரித்து வருவதாக, பாதுகாப்பு செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

# ஓட்டோ விபத்தில் இளைஞர் மரணம்

மாத்தறை, பெப். 24

மாத்தறை, திக்வெல்ல பகுதியில் ஓட்டோ கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உடல் நசுங்கி துரதிஷ்டவசமாக உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரதம்பல வீதியைச் சேர்ந்த 31 வயதான ஹேவா கலுகபுகே ஹசன் என்பவரே உயிரிழந்தார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் ரதம்பல வீதியில் வலஸ்கலைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விசாரணையின்போது ஓட்டோ வீதியில் உள்ள சுவரில் மோதி கவிழ்ந்துள்ளது. அதன் கீழ் உடல் நசுங்கி இளைஞருக்கு மரணம் ஏற்பட்டது என்று தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனையில், வாகனத்தில் நசுங்கியதால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக மரணம் ஏற்பட்டது என்று தெரியவந்துள்ளது.

# நாட்டில் 4 நாட்களில் 8 கொலைகள்!



நாட்டில் கடந்த 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையிலான 4 நாட்களில் 8 கொலைகள் நடந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையே இடம்பெற்று வரும் இந்த கொலைக் கலாசாரம் தேசிய பாதுகாப்பிற்குப் பிரச்சினையாக காணப்படுகிறது என சுட்டிக்காட்டிய அதேவேளை, தேசிய பாதுகாப்புக்கு இது பிரச்சினையல்ல என ஜனாதிபதி குறிப்பிடுவதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய தினத்தில் நீதிமன்றத்தினுள் நடந்த மிலேச்சத்தனமான கொலையுடன் தொடர்புடைய பெண்ணின் வண்ணப் புகைப்படங்கள் உள்ளிட்ட தகவல்கள் புலனாய்வு தரப்பிற்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பிலான புலனாய்வு அறிக்கைகளை ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

குறித்த கொலை தொடர்பிலான தகவல்கள் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்றிருந்தன. இவ்வாறு தகவல்கள் கிடைக்கப்பெற்றிருந்தும் பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்பட்டமை குறித்து தெளிவான விளக்கம் இங்கு வழங்கப்பட வேண்டும்.

மிலேச்ச கொலையாளிகளின் இந்தச் செயல்கள் பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றன. புலனாய்வு பிரிவிற்கு தகவல் கிடைக்கப் பெற்ற பிறகு அது குறித்து நடவடிக்கைகளை எடுக்க இதைவிடவும் முறையான திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.



# ஜேர்மனிய தேர்தலில் பழமைவாதிகள் வெற்றி ஜனாதிபதியாக பதவியேற்கும் ஃபிரெட்ரிக் மெர்ஸ்




ஜேர்மனியில் நேற்று (23) நடைபெற்ற தேசியத் தேர்தலில் எதிர்க்கட்சி பழமைவாதிகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக ஃபிரெட்ரிக் மெர்ஸ் (Friedrich Merz) பதவியேற்கவுள்ளார்.

புதிய ஒரு அரசாங்கத்தை அமைக்கத் தயாராகும் போது, ஐரோப்பாவிற்கு அமெரிக்காவிலிருந்து "உண்மையான சுதந்திரத்தை" வழங்க உதவுவதாகவும் அவர் சபதம் செய்தார்.

தற்போதைய அதிபர் ஓலாஃப் ஸ்கோல்ஸின் மூன்று வழி கூட்டணி சரிந்ததைத் தொடர்ந்து, தீவிர வலதுசாரி மாற்று ஜெர்மனி (AfD) கட்சி, ஒரு உடைந்த வாக்குகளில் வரலாற்று ரீதியாக இரண்டாவது இடத்திற்கு உயர்ந்தது.

இதனால், 69 வயதான மெர்ஸ் சிக்கலான மற்றும் நீண்ட கூட்டணி பேச்சுவார்த்தைகளை தற்சமயம் எதிர்கொண்டுள்ளார்.

தொழில்நுட்ப கோடீஸ்வரரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நண்பருமான எலோன் மஸ்க் உள்ளிட்ட முக்கிய அமெரிக்க பிரமுகர்களின் ஒப்புதலைப் பெற்ற AfD உடன் இணைந்து பணியாற்றுவதை பிரதான கட்சிகள் நிராகரிக்கின்றன.

ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரம் நலிவடைந்துள்ள நிலையில், அதன் சமூகம் இடம்பெயர்வு காரணமாக பிளவுபட்டு, அதன் பாதுகாப்பு மோதலில் ஈடுபடும் அமெரிக்காவிற்கும் உறுதியான ரஷ்யா மற்றும் சீனாவிற்கும் இடையில் சிக்கியுள்ள நிலையில், மெர்ஸ், முன்னர் பதவியில் அனுபவம் இல்லாத நிலையில், ஜனாதிபதியாக பொறுப்பேற்க உள்ளார்.

தனது வெற்றிக்குப் பின்னர் மெர்ஸ் அமெரிக்காவை நேரடியாகக் குறிவைத்து, பிரச்சாரத்தின் போது வொஷிங்டனில் இருந்து வந்த மூர்க்கத்தனமான கருத்துக்களை விமர்சித்து, அவற்றை ரஷ்யாவின் விரோதத் தலையீடுகளுடன் ஒப்பிட்டார்.

"இரு தரப்பிலிருந்தும் நாங்கள் மிகப்பெரிய அழுத்தத்தை எதிர்கொள்கிறோம், இப்போது எனது முழுமையான முன்னுரிமை ஐரோப்பாவில் ஒற்றுமையை அடைவதாகும். ஐரோப்பாவில் ஒற்றுமையை உருவாக்குவது சாத்தியமாகும்," என்று அவர் ஏனைய தலைவர்களுடனான ஒரு வட்டமேசை மாநாட்டில் கூறினார்.

ஐரோப்பாவை விரைவில் வலுப்படுத்துவதே எனது முழுமையான முன்னுரிமையாக இருக்கும், இதன் மூலம் அமெரிக்காவிலிருந்து படிப்படியாக உண்மையான சுதந்திரத்தை அடைய முடியும் என்று அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்ப் தேர்தல் முடிவை வரவேற்ற போதிலும், அமெரிக்காவிற்கு எதிரான மெர்ஸின் விமர்சனம் வந்தது.

தேர்தலில் பழமைவாத CDU/CSU கூட்டணி 28.5% வாக்குகளைப் பெற்றது. அதைத் தொடர்ந்து AfD 20.5% வாக்குகளைப் பெற்றது என்று ZDF ஒளிபரப்பாளரால் ஞாயிற்றுக்கிழமை பிற்பகுதியில் வெளியிடப்பட்ட ஒரு கணிப்பு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வெடி குண்டு அச்சுறுத்தல் பாதுகாப்புடன் ரோமுக்கு அழைத்து செல்லப்பட்ட அமெரிக்கன் ஏர்லைன்ஸ்!



நியூயோர்க்கில் இருந்து டெல்லி நோக்கி பயணித்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானம் பாதுகாப்புக் காரணத்தால் நேற்று (23) ரோம் நகருக்குத் திருப்பி விடப்பட்டது.

வெடி குண்டு அச்சுறுத்தல் காரணமாக அமெரிக்கன் ஏர்லைன்ஸின் போயிங் 787-9 ட்ரீம்லைனர் விமானம் ரோம் நகரில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகவல்களின் படி, விமானம் காஸ்பியன் கடலுக்கு மேல் இருந்தபோது வெடிகுண்டு மிரட்டல் குறித்து பணியாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து இத்தாலிய விமானப்படை போர் விமானங்கள், விமானத்தை ரோம் நகருக்கு அழைத்துச் சென்றன, அங்கு விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியது என்று இத்தாலிய தலைநகரில் உள்ள அதிகாரிகள் ஏபிசி செய்தியிடம் தெரிவித்தனர்.

199 பயணிகள் மற்றும் 15 பணியாளர்களுடன் பயணித்த விமானம் நேற்று இரவு ரோமின் லியோனார்டோ டா வின்சி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

சட்ட அமுலாக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் பின்னர் விமானம் 15 மணிநேர தாமதமாக டெல்லி நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

விமானம் டெல்லியில் தரையிறங்குவதற்கு முன் நெறிமுறையின்படி ஒரு ஆய்வுக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## உக்ரேன் போர் 3 ஆண்டு நிறைவு தலைநகரில் ஒன்று குவிந்த ஐரோப்பிய, கனேடிய தலைவர்கள்!

ரஷ்யாவின் படையெடுப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஐரோப்பா மற்றும் கனடாவைச் சேர்ந்த பல தலைவர்கள் இன்று (24) உக்ரேனின் தலைநகருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உள்ளிட்டோர் ஆண்டு நிகழ்வில் கலந்து கொள்ள தலைநகர் கீவ்வில் ஒன்று கூடினர்.



இந்த விஜயத்தின் போது உக்ரேனை ஆதரிப்பது குறித்தும் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் அவர்கள் விவாதிக்க திட்டமிட்டுள்ளனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உக்ரேன் அல்லது ஐரோப்பா சம்பந்தப்படாமல் அமெரிக்கா எந்த சமாதான உடன்படிக்கைக்கும் முத்திரை குத்த முடியாது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்ட இராஜதந்திரிகள் இந்த விஜயத்தின் போது வலியுறுத்தினர்.

உக்ரேனில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான விரைவான ஒப்பந்தத்திற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

வொஷிங்டனின் ஐரோப்பிய நட்பு நாடுகளையும் உக்ரேனையும் ரஷ்யாவுடனான ஆரம்ப பேச்சுவார்த்தைகளில் இருந்து விலக்கி வைப்பதன் மூலமும், மொஸ்கோவின் 2022 படையெடுப்பிற்கு கீவ்வை குறை கூறுவதன் மூலமும் அவர்களை கவலையடையச் செய்கிறார்.

இது மொஸ்கோவிற்கு அரசியல் பரிசுகளையும் வலுவான பொருளாதார நன்மைகளையும் தரக்கூடும்.

ரஷ்யாவின் மத்திய வங்கியின் முன்னாள் துணைத் தலைவர் ஒலெக் வ்யூகின் கருத்துப்படி, மொஸ்கோ இரண்டு விரும்பத்தகாத விருப்பங்களை எதிர்கொண்டுள்ள நிலையில் வொஷிங்டனின் அழுத்தம் வருகிறது.

உக்ரேனில் நிலப்பரப்பைக் கைப்பற்ற அழுத்தம் கொடுக்கும்போது ரஷ்யா இராணுவச் செலவினங்களை உயர்த்துவதை நிறுத்தலாம் அல்லது அதைப் பராமரித்து பல ஆண்டுகளாக மெதுவான வளர்ச்சி, அதிக பணவீக்கம் மற்றும் வீழ்ச்சியடைந்து வரும் வாழ்க்கைத் தரங்களுக்கு விலை கொடுக்கலாம்.

இவை அனைத்தும் அரசியல் அபாயங்களைக் கொண்டுள்ளன என்றும் அவர் கூறினார்.



## பதவியைத் துறக்கத் தயார்! ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அறிவிப்பு

உக்ரேனுக்கு நேட்டோ உறுப்பினர் பதவியைக் கொடுத்தால், தனது ஜனாதிபதி பதவியைத் துறக்கத் தான் தயாராக இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

உக்ரேன்-ரஷ்யா இடையேயான போர் கடந்த 3 ஆண்டுகளாக நீடித்து வரும் நிலையில் இப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். மேலும் 'உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சர்வதிகாரிபோல் செயற்படுகிறார் எனவும், இவர் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாக விட மாட்டார் எனவும் ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்த போதே வோலோடிமிர் ஜெலன்ஸ்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது உக்ரேனில் அமைதி நிலவ வேண்டும் என்றால் தனது பதவியை விட்டுக்கொடுக்கத் தயார் எனவும், உக்ரேனுக்கு நேட்டோ உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் எனவும், ரஷ்யாவின் முழுமையான படையெடுப்பிற்கு எதிராக உக்ரேனுக்கு ட்ரம்ப் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்கள் மிகவும் தேவை. உக்ரேன் மற்றும் ரஷ்யா இடையே டிரம்ப் மத்தியஸ்தராக இருக்க வேண்டும் எனவும் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேட்டோ நாடுகளுக்கு நேட்டோ படைகள் பாதுகாப்பு தரும். குறிப்பாக நேட்டோ உறுப்பு நாட்டை யாராவது தாக்கினால், பதிலாக அனைத்து நேட்டோ நாடுகளும் ஆதரவாக வரும். இது தனக்கான பாதுகாப்பைத் தரும் என உக்ரேன் கருதுகிறது. நேட்டோவில் உக்ரேன் உறுப்பினராக இணைய ரஷ்யா மறுப்பு தெரிவித்ததே போருக்கு முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீனவர்கள் ராமேஸ்வரத்தில் வேலைநிறுத்தப் போராட்டம்!







தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ராமேஸ்வரம் மீனவர்கள் இன்று (24) முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று அதிகாலை இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக ராமேஸ்வரம் மீனவர்கள் 32 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது.

அத்துடன், மீன்பிடி பணிகளுக்காக மீனவர்கள் பயன்படுத்தி 05 விசைப் படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்திருந்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே மீனவர்கள் மேற்கண்ட போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே, இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்கமாறு வலியுறுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அதேநேரம், பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலையும், கைது செய்யப்பட்ட மீனவர்களை விரைவில் மீட்க தலையிடக் கோரி அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையின் முடிவில்லாத தாக்குதல்களுக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் இருந்து 450க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் சனிக்கிழமை காலை மீன்பிடிக்க புறப்பட்டன. இலங்கை கடற்படையின் கூற்றுப்படி, வட மத்திய கடற்படை கட்டளை இந்திய மீன்பிடி படகுகள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதைக் கண்டறிந்து அவற்றை விரட்டுவதற்கு அதன் கரையோர ரோந்துக் கப்பல்களை அனுப்பியது.

தொடர்ந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 32 இந்திய மீனவர்களை கைது செய்ததுடன் அவர்களது இழுவை படகுகளையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு மன்னார் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

2025 ஆம் ஆண்டு இதுவரை 18 இந்திய மீன்பிடி படகுகளை இலங்கை கடற்படையினர் தடுத்து வைத்துள்ளனர்.

மேலும், 131 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சீமான் மீதான பாலியல் வன்கொடுமை புகார் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல்




நடிகை விஜயலட்சுமி புகார் தொடர்பாக சீமான் மீது விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய பொலிஸார் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் ஏமாற்றிவிட்டதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு எதிராக நடிகை விஜயலட்சுமி சென்னையில் உள்ள வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு புகார் அளித்திருந்தார்.

குறித்த புகாரினையடுத்து பொலிஸார் சீமானுக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கை இரத்து செய்யக் கோரி சீமான் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அதில், நடிகை விஜயலட்சுமி தனக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு அளித்த பாலியல் புகாரை 2012-ல் திரும்பப் பெறுவதாக எழுதிக் கொடுத்தார் எனவும், அதன் அடிப்படையில் பொலிஸார் அந்த வழக்கை முடித்து வைத்தனர் எனவும், ஆனால், தற்போது அரசியல் காரணங்களுக்காக அந்த வழக்கை பொலிஸார் மீண்டும் விசாரித்து வருகின்றனர் எனவும், எனவே விஜயலட்சுமி அளித்த புகாரின் பேரில் பதியப்பட்ட வழக்கை இரத்து செய்ய வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பாக அண்மையில் நடந்தது. சீமான் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ‘சிலரது தூண்டுதல் காரணமாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதியப்பட்ட இந்த வழக்கை இரத்து செய்ய வேண்டும்’ என வாதிட்டார்.

எனினும் பொலிஸார் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி , நடிகை விஜயலட்சுமியும், சீமானும் 2008-ம் ஆண்டு மதுரை மீனாட்சியம்மன் கோவில் வெளிப்பிரகாரத்தில் மாலை மாற்றிக் கொண்டுள்ளனர் எனவும், ஆனால் தாலி கட்டவில்லை எனவும், தன்னை திருமணம் செய்து கொள்வதாக சீமான் கூறியதன் காரணமாகவே விஜயலட்சுமி, சீமானுடன் நெருங்கிப் பழகியுள்ளார் எனவும், பின்னர், அவர் அளித்த பாலியல் புகாரை சிலர் அளித்த நிர்பந்தம் காரணமாகவே திரும்பப் பெற்றார் எனவும், அவராகவே மனமுவந்து வாபஸ் பெறவில்லை எனவும். எனவே, சீமானுக்கு எதிரான இந்த பாலியல் வழக்கை இரத்து செய்யக்கூடாது எனவும் வாதிட்டனர்.

இந்நிலையில் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஜி.கே.இளந்திரையன், ‘அப்படியென்றால் நடிகை விஜயலட்சுமி சீமானுக்கு முதல் மனைவியா’ என கேள்வி எழுப்பியதோடு ‘இந்த வழக்கை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. விஜயலட்சுமி புகாரை திரும்பப் பெற்றாலும்கூட பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருப்பதால், இந்த வழக்கை இரத்து செய்ய முடியாது.

இந்த வழக்கில் பொலிஸார் 12 வார காலத்துக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்’ என உத்தரவிட்டு சீமான் தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்தார். இதன் அடிப்படையில் சீமான் மீது விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய பொலிஸார் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஜார்கண்டி விபத்தில் கும்பமேளாவுக்குச் சென்ற அறுவர் உயிரிழப்பு!

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தின் தன்பாத் மாவட்டம் தலுதிஹ் அருகேயுள்ள தேசிய நெடுஞ்சாலையில் நேற்றுமுன்தினம் பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற விபத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் உள்ளிட்ட அறுவர் உயிரிழந்தனர்.

மேலும் இந்த விபத்தில் 07 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மகா கும்பமேளாவில் புனித நீராடுவதற்காக பிரயாக்ராஜுக்குச் சென்று கொண்டிருந்தபோது நேற்றுமுன்தினம் அதிகாலை 1:15 மணியளவில் இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த அனைவரும் மேற்கு வங்கத்தின் ஹுக்ளி மாவட்டத்தின் கவுகாட் பொலிஸ் நிலையப் பகுதியில் உள்ள சத்வேதிஹா பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பழுதடைந்த டிரக் மீது வேகமாக வந்த எஸ்யூவி வாகனம் முதலில் மோதியதன் பின்னர் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தின் பின்னர், உடனடியாக அப்பகுதியில் ரோந்து வந்த பொலிஸார் உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.



# தலைமுறைகளாய் தொடரும் துயரம்!

"செரிப்ரல் பால்ஸி" என்னும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு இறந்த தன் குழந்தையைப் போல யாரும் கஷ்டப்படக் கூடாது என்பதற்காகத் தமிழகத்தில் 'வித்யாசாகர்' என்னும் சிறப்பு பள்ளியைத் தொடங்கிய பூனம் நடராஜன் மிகவும் மரியாதைக்குரிய நபர் அவர்.

உலகில் இதுவரை சுமார் ஏழாயிரம் மரபணுக் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால், அதில் நமக்குப் பரிச்சயமானது எத்தனை என்று கேட்டால் ஒன்று, இரண்டு என்று விரல்விட்டு எண்ணி விடலாம். மக்களிடையே விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதை ஒரு சில காரணங்களால் ஏற்றுக் கொண்டாலும்கூட மருத்துவர்களிடையேகூட இது போன்ற மரபணுக் குறைபாடுகளைப் பற்றிய விழிப்புணர்வு இல்லை என்பது மிகுந்த வேதனை அளிக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக சிஸ்டிக் ஃபைபிரோஸிஸ் என்னும் மரபணுக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை,

எத்தனை மருத்துவமனைப் படிகளை மிதித்திருக்கிறது.. எத்தனை சிகிச்சை முறைகளுக்கு அந்தக் குழந்தை தன்னை ஆளாக்கி இருக்கிறது. எத்தனை மருத்துவக் கோப்புகளை அந்தக் குழந்தையின் பெற்றோர் தூக்கிக் கொண்டு அலைந்திருக்கிறார்கள். அத்தனையும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. இத்தனைக்கும் காரணம் மரபணுக் குறைபாடுகளைப் பற்றிய விழிப்புணர்வும் அதற்கான போதிய மருத்துவ வசதியும் இல்லாததுதான்.

இந்தியாவின் சி.எம்.சி போன்ற ஓரிரு மருத்துவமனைகள்தாம் இது போன்ற மரபணுக் குறைபாடுகளுக்கென்றே தனிப்பிரிவை வைத்து இயங்கி வருகின்றன. ஒற்றைப் புள்ளியில் தொடங்கிய உயிர்கள் அனைத்தும் இந்த மரபணுக்களால் கட்டமைக்கப்பட்டதுதாம். அவ்வளவு ஏன் செடி, கொடி, தாவரங்கள்கூட மரபணுக்களால் பிணைக்கப்பட்டதுதான். ஆனால், அதைப் பற்றிப் படிப்பவர்களின் எண்ணிக்கை மட்டும் குறைவாகவே இருக்கிறது. கொரோனா பெருந்தொற்றிலிருந்துதான் மக்களிடையே மரபணு பிறழ்வு, பி.சி.ஆர் (PCR) போன்ற நுட்பங்களின் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் மரபியல் ஆலோசகர்கள் ஒவ்வொரு மருத்துவமனையிலும் பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மரபியல் ஆலோசனைக்கென்றே ஒரு தனி பட்டப்படிப்பே இருக்கிறது. ஆனால், இன்னும் நம்மில் நிறைய பேருக்கு மரபணு, தாயனை போன்ற வார்த்தைகளே பரிச்சயமாக இல்லை என்பதுதான் நிதர்சனம்.

இந்தப் பக்கம் இருந்து பார்க்கும்போது மக்களிடையே இதுபோன்ற விழிப்புணர்வும் தகவல்களும் கிடைக்க பெறுவதே சரி என்று தோன்றுகிறது. ஆனால், இதன் இன்னொரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது மரபணு



உருமாற்றத்தை உயிரினங்களில் புகுத்தி இயற்கைக்குப் புறம்பாக நடக்கும் ஆராய்ச்சிகள் தொடர்வது ஆக்கப்பூர்வமானதல்ல என்கிற கருத்து உறுத்துகிறது. மரபணுக்களைப் படிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால், அதை எப்படிக் கையாள்கிறோம் என்பது அதைவிட அவசியம். தடயவியலில், தொல்பொருள் ஆராய்ச்சியில், பரிணாம வளர்ச்சியில், மருத்துவத்தில், தாயனை பற்றிய விழிப்புணர்வு கட்டாயமாக இருக்க வேண்டும்.

மரபணு பற்றிய விழிப்புணர்வு இல்லாததுதான் சொந்தத்திற்குள் திருமணம் செய்துகொள்வது போன்ற நிகழ்வுகளுக்குக் காரணம். காலம் காலமாக நம் குடும்பங்களில் பின்பற்றப்பட்ட வழக்கத்தைத் தவறென்று சொல்வதா என்கிற கேள்வி இன்றும் பலரிடம் விவாதத்திற்குரியதாக இருக்கிறது. இது தவறா, சரியா என்பதைப் பற்றி விவாதிப்பதைத் தாண்டி இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி யோசிப்பதுதான் சாமர்த்தியம்.

மரபணுக் குறைபாடுகளைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினம். அதற்குக் காரணம் சில மரபணுக் குறைபாடுகளுக்கு அம்மா, அப்பாவிடம் இருந்து வரும் ஏதோ ஒரு மரபணுவில் குறைபாடு இருந்தாலும்கூட அந்த மரபணுக் குறைபாடு குழந்தைக்கு வருவதற்கு 75 சதவீதம் வாய்ப்பிருக்கிறது. ஆனால், சில மரபணுக் குறைபாடுகளுக்கு அம்மா, அப்பாவிடம் இருந்து வரும் இரண்டு மரபணுக்களும் குறைபாடுடன் இருந்தால் மட்டுமே குழந்தைக்கு அந்த மரபணு குறைபாடு வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதுவும் 25 சதவீதம் தான். இந்த வகை குறைபாடுதான் சொந்தத்திற்குள் பாதிக்க வாய்ப்பிருக்கிறது. அதுவும் நெருங்கிய சொந்தங்களைத் திருமணம் செய்தால் இது போன்ற மரபணுக் குறைபாடுகள் குழந்தைகளுக்கு வருவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது. நெருங்கிய சொந்தங்களைத் திருமணம் செய்யும் அனைவருக்குமே இந்த வகை மரபணுக் குறைபாடுகள் வருமா என்று கேட்டால், இல்லை. ஒரு குடும்பத்தில் யாரோ ஒருவர் ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட மரபணுக் குறைபாடால் பாதிக்கப்பட்டு அந்த மரபணு பிறழ்வு அந்தக் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே வலம்வரும்பட்சத்தில் அந்தக் குடும்ப உறுப்பினர்கள் நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஒருவேளை திருமணம் செய்துகொண்டாலும் மர



பியல் ஆலோசகர்களுடைய ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் கேட்டு நடப்பது அவசியம்.

சொந்தத்திற்குள் திருமணம் செய்துகொள்ளாமலும் இது போன்ற மரபணுக் குறைபாடுகள் வருவதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால், அதற்கான சதவீதம் சொந்தத்திற்குள் திருமணம் செய்துகொள்வதால் ஏற்படுவதைவிடக் குறைவு. சில மரபணுப் பிறழ்வுகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் சொந்தமானதாக இருப்பதற்குக் காரணம் இது போன்ற நெருங்கிய சொந்தத்திற்குள் திருமணம் செய்வதுதான்.

காலம் காலமாக இருந்து வந்த மரபால் முந்தைய தலைமுறையினருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லையா என்கிற கேள்விக்கு உணவு முறையும் வாழ்க்கை முறையும்தான் பதில். இன்றைய சூழலில் அதிக மரபணுப் பிறழ்வுகள் ஏற்படுவதற்குக் துரிதமாக

இது போன்ற மரபணுக் குறைபாடுகளுக்கு எங்கு சிகிச்சை கிடைக்கும்? முதலில் இது மரபணுக் குறைபாடுதான் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? ஏற்கெனவே இந்த மரபணுக் குறைபாடு வேறு யாருக்காவது இருக்கிறதா? அப்படி இருந்தால் அவர்களை எப்படித் தொடர்பு கொள்வது? அதற்கான மருத்துவ வசதி எங்கு இருக்கிறது? மருந்து எங்கு கிடைக்கும்? இது போன்ற அரிதான நோய்களுக்கு வழக்கமான மருந்தகங்களில் மருந்து, எளிதாக கிடைப்பதில்லை. அதனால் இது போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க நாம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டியது அவசியம்.

அது மட்டுமின்றி மரபணுப் பிறழ்வால் ஏற்படக்கூடிய புற்றுநோய்களைத் தடுப்பதற்கு வருடம் ஒருமுறை அதற்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். தற்போதிருக்கும் தொழில்நுட்பத்தை வைத்து, ஏற்கெனவே ஒருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அதுவும் ஏற்கெனவே குடும்பத்தில் யாரோ ஒருவருக்குப் புற்றுநோய் இருக்கும் பட்சத்தில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவு மரபியல் ஆலோசகர்களுடைய அறிவுரையைக் கேட்டு நடப்பதும் முக்கியம்.

சில மரபணுக் குறைபாடுகள் பிறவியிலிருந்து வெளிப்படுவதில்லை. நடுத்தர வயது, அதாவது நாற்பது வயதிற்கு மேல்தான் அந்த மரபணுக் குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பிக்கும். இதை ஆங்கிலத்தில், டயவந ழளெநவ னளைழசனநசள என்பர். இந்த வகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் கட்டாயம் அந்தக் குறைபாட்டிற்கான மரபணு பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். குழந்தைக்காகத் திட்டமிடும் போதும் குழந்தை பிறந்த பிறகும் மரபியல் ஆலோசகர்களை அணுக வேண்டும்.

இது போன்ற தவிர்க்க முடியாத குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அடுக்க தலைமுறையின் ஆரோக்கியம்

# தலைமுறைகளாய் தொடரும் துயரம்!

“செரிப்ரல் பால்ஸி” என்னும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு இறந்த தன் குழந்தையைப் போல யாரும் கஷ்டப்படக் கூடாது என்பதற்காகத் தமிழகத்தில் ‘வித்யாசாகர்’ என்னும் சிறப்பு பள்ளியைத் தொடங்கிய பூனம் நடராஜன் மிகவும் மரியாதைக்குரிய நபர் அவர்.

உலகில் இதுவரை சுமார் ஏழாயிரம் மரபணுக் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால், அதில் நமக்குப் பரிச்சயமானது எத்தனை என்று கேட்டால் ஒன்று, இரண்டு என்று விரல்விட்டு எண்ணி விடலாம். மக்களிடையே விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதை ஒரு சில காரணங்களால் ஏற்றுக் கொண்டாலும்கூட மருத்துவர்களிடையேகூட இது போன்ற மரபணுக் குறைபாடுகளைப் பற்றிய விழிப்புணர்வு இல்லை என்பது மிகுந்த வேதனை அளிக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக சிஸ்டிக் ஃபைபிரோஸஸிஸ் என்னும் மரபணுக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை,

எத்தனை மருத்துவமனைப்படிகளை மிதித்திருக்கிறது.. எத்தனை சிகிச்சை முறைகளுக்கு அந்தக் குழந்தை தன்னை ஆளாக்கி இருக்கிறது. எத்தனை மருத்துவக் கோப்புகளை அந்தக் குழந்தையின் பெற்றோர் தூக்கிக் கொண்டு அலைந்திருக்கிறார்கள். அத்தனையும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. இத்தனைக்கும் காரணம் மரபணுக் குறைபாடுகளைப் பற்றிய விழிப்புணர்வும் அதற்கான போதிய மருத்துவ வசதியும் இல்லாததுதான்.



இந்தியாவின் சி.எம்.சி போன்ற ஓரிரு மருத்துவமனைகள்தாம் இது போன்ற மரபணுக் குறைபாடுகளுக்கென்றே தனிப்பிரிவை வைத்து இயங்கி வருகின்றன. ஒற்றைப் புள்ளியில் தொடங்கிய உயிர்கள் அனைத்தும் இந்த மரபணுக்களால் கட்டமைக்கப்பட்டதுதாம். அவ்வளவு ஏன் செடி, கொடி, தாவரங்கள்கூட மரபணுக்களால் பிணைக்கப்பட்டதுதான். ஆனால், அதைப் பற்றிப் படிப்பவர்களின் எண்ணிக்கை மட்டும் குறைவாகவே இருக்கிறது. கொரோனா பெருந்தொற்றிலிருந்துதான் மக்களிடையே மரபணு பிறழ்வு, பி.சி.ஆர் (ஊசு) போன்ற நுட்பங்களின் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் மரபியல் ஆலோசகர்கள் ஒவ்வொரு மருத்துவமனையிலும் பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மரபியல் ஆலோசனைக்கென்றே ஒரு தனி பட்டப்படிப்பே இருக்கிறது. ஆனால், இன்னும் நம்மில் நிறைய பேருக்கு மரபணு, தாயனை போன்ற வார்த்தைகளே பரிச்சயமாக இல்லை என்பதுதான் நிதர்சனம்.

இந்தப் பக்கம் இருந்து பார்க்கும்போது மக்களிடையே இதுபோன்ற விழிப்புணர்வும் தகவல்களும் கிடைக்க பெறுவதே சரி என்று தோன்றுகிறது. ஆனால், இதன் இன்னொரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது மரபணு உருமாற்றத்தை உயிரினங்களில் புகுத்தி இயற்கைக்குப் புறம்பாக நடக்கும் ஆராய்ச்சிகள் தொடர்வது ஆக்கப்பூர்வமானதல்ல என்கிற கருத்து உறுத்துகிறது. மரபணுக்களைப் படிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால், அதை எப்படிக் கையாள்கிறோம் என்பது அதைவிட அவசியம். தடயவியலில், தொல்பொருள் ஆராய்ச்சியில், பரிணாம வளர்ச்சியில், மருத்துவத்தில், தாயனை பற்றிய விழிப்புணர்வு கட்டாயமாக இருக்க வேண்டும்.



மரபணு பற்றிய விழிப்புணர்வு இல்லாததுதான் சொந்தத்திற்குள் திருமணம் செய்துகொள்வது போன்ற நிகழ்வுகளுக்குக் காரணம். காலம் காலமாக நம் குடும்பங்களில் பின்பற்றப்பட்ட வழக்கத்தைத் தவறென்று சொல்வதா என்கிற கேள்வி இன்றும் பலரிடம் விவாதத்திற்குரியதாக இருக்கிறது. இது தவறா, சரியா என்பதைப் பற்றி விவாதிப்பதைத் தாண்டி இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி யோசிப்பதுதான் சாமர்த்தியம்.

மரபணுக் குறைபாடுகளைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினம். அதற்குக் காரணம் சில மரபணுக் குறைபாடுகளுக்கு அம்மா, அப்பாவிடம் இருந்து வரும் ஏதோ ஒரு மரபணுவில் குறைபாடு இருந்தாலும்கூட அந்த மரபணுக் குறைபாடு குழந்தைக்கு வருவதற்கு 75 சதவீதம் வாய்ப்பிருக்கிறது. ஆனால், சில மரபணுக் குறைபாடுகளுக்கு அம்மா, அப்பாவிடம் இருந்து வரும் இரண்டு மரபணுக்களும் குறைபாடுடன் இருந்தால் மட்டுமே குழந்தைக்கு அந்த மரபணு குறைபாடு வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதுவும் 25 சதவீதம்தான். இந்த வகை குறைபாடுதான் சொந்தத்திற்குள் திருமணம் செய்யும்போது அடுத்த தலைமுறையைப் பாதிக்க வாய்ப்பிருக்கிறது. அதுவும் நெருங்கிய சொந்தங்களைத் திருமணம் செய்தால் இது போன்ற மரபணுக் குறைபாடுகள் குழந்தைகளுக்கு வருவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது. நெருங்கிய சொந்தங்களைத் திருமணம் செய்யும் அனைவருக்குமே இந்த வகை மரபணுக் குறைபாடுகள் வருமா என்று கேட்டால், இல்லை. ஒரு குடும்பத்தில் யாரோ ஒருவர் ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட மரபணுக் குறைபாடால் பாதிக்கப்பட்டு அந்த மரபணு பிறழ்வு அந்தக் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே வலம்வரும்பட்சத்தில் அந்தக் குடும்ப உறுப்பினர்கள் நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஒருவேளை திருமணம் செய்துகொண்டாலும் மரபியல் ஆலோசகர்களுடைய ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் கேட்டு நடப்பது அவசியம்.



சொந்தத்திற்குள் திருமணம் செய்துகொள்ளாமலும் இது போன்ற மரபணுக் குறைபாடுகள் வருவதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால், அதற்கான சதவீதம் சொந்தத்திற்குள் திருமணம் செய்துகொள்வதால் ஏற்படுவதைவிடக் குறைவு. சில மரபணுப் பிறழ்வுகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் சொந்தமானதாக இருப்பதற்குக் காரணம் இது போன்ற நெருங்கிய சொந்தத்திற்குள் திருமணம் செய்வதுதான்.

காலம் காலமாக இருந்து வந்த மரபால் முந்தைய தலைமுறையினருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லையா என்கிற கேள்விக்கு உணவு முறையும் வாழ்க்கை முறையும்தான் பதில். இன்றைய சூழலில் அதிக மரபணுப் பிறழ்வுகள் ஏற்படுவதற்குத் துரிதமாக நாம் செய்யும் ஒவ்வொன்றும்தான் காரணம்.

இது போன்ற மரபணுக் குறைபாடுகளுக்கு எங்கு சிகிச்சை கிடைக்கும்? முதலில் இது மரபணுக் குறைபாடுதான் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? ஏற்கெனவே இந்த மரபணுக் குறைபாடு வேறு யாருக்காவது இருக்கிறதா? அப்படி இருந்தால் அவர்களை எப்படித் தொடர்பு கொள்வது? அதற்கான மருத்துவ வசதி எங்கு இருக்கிறது? மருந்து எங்கு கிடைக்கும்? இது போன்ற அரிதான நோய்களுக்கு வழக்கமான மருந்தகங்களில் மருந்து, எளிதாக கிடைப்பதில்லை. அதனால் இது போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க நாம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டியது அவசியம்.

அது மட்டுமின்றி மரபணுப் பிறழ்வால் ஏற்படக்கூடிய புற்றுநோய்களைத் தடுப்பதற்கு வருடம் ஒருமுறை அதற்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். தற்போதிருக்கும் தொழில்நுட்பத்தை வைத்து, ஏற்கெனவே ஒருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அதுவும் ஏற்கெனவே குடும்பத்தில் யாரோ ஒருவருக்குப் புற்றுநோய் இருக்கும் பட்சத்தில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவு மரபியல் ஆலோசகர்களுடைய அறிவுரையைக் கேட்டு நடப்பதும் முக்கியம்.

சில மரபணுக் குறைபாடுகள் பிறவியிலிருந்து வெளிப்படுவதில்லை. நடுத்தர வயது, அதாவது நாற்பது வயதிற்கு மேல்தான் அந்த மரபணுக் குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பிக்கும். இதை ஆங்கிலத்தில், டயவந ழளெநவ னளைழசனநசள என்பர். இந்த வகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் கட்டாயம் அந்தக் குறைபாட்டிற்கான மரபணு பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். குழந்தைக்காகத் திட்டமிடும் போதும் குழந்தை பிறந்த பிறகும் மரபியல் ஆலோசகர்களை அணுக வேண்டும்.

இது போன்ற தவிர்க்க முடியாத குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அடுத்த தலைமுறையின் ஆரோக்கியம் இன்றைய தலைமுறையின் செயல்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.02.2025 இல் வெளியிடப்பெற்றது.